# சுற்றுமடல்

கடித எண்: GR/1/2012

ஈசோ மெசியாவில் அன்புக்குரிய அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, அன்பு சகோதர சகோதரிகளே,

**நம் தந்தையாம் கடவுளிடமிருந்தும், ஆண்டவராம் ஈசோ மெசியாவிடமிருந்தும் அருளும் அமைதியும் உரித்தாகுக.**

கடந்த சில வாரங்களாக நடைபெற்ற எல்லா நிகழ்வுகளும் நன்முறையில் நடைபெற உதவிய இறைவனுக்கும் அதனுடன் ஒத்துழைத்த உங்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த நன்றியை இச்சுற்றுமடல் வழியாக தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய குருத்துவ அருள்பொழிவிற்காக நான் தேர்ந்து கொண்ட விருதுவாக்கு ‘‘வல்லவராம் கடவுள் எனக்கு அரும் பெரும் செயல்கள் செய்துள்ளார்’’ (லூக் 1:49) என்பதாகும். தக்கலை மறைமாவட்டத்தின் மேய்ப்புப் பணியை செய்யும் பெரிய பொறுப்பு இறைவனால் என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இறைஅழைத்தலை ஏற்றுக் கொள்வதற்கான வலிமையை எனக்கு தந்த இறைவார்த்தை ‘‘கடவுளால் எல்லாம் இயலும்’’ (மத்19:26). இதனையே ஆயர் திருநிலைப்பாடின் விருதுவாக்காகவும் கொண்டுள்ளேன்.

ஆயர் திருநிலைப்பாட்டு விழா மிகச் சிறப்பாக நிகழ நன்முறையில் திட்டமிட்டு, இரவு, பகலெனப் பாராமல் உழைத்த தக்கலை மறைமாவட்ட அனைத்து அருள்தந்தையர்கள், அருட்சகோதரியர், குறிப்பாக பேரருள்தந்தை பிலிப் கொடியந்தறாவுடன் இணைந்து பணிகளைப் பங்கிட்டு உழைத்தவர்கள், மறைமாவட்ட அருள்பணி பேரவையினர், ஒவ்வொரு பங்கு பேரவையினர், உறவியப் பொறுப்பாளர்கள், இளைஞர்கள், பக்த சபைகள், சிறார்கள், பொதுநிலையினர் ஒவ்வொருவருக்கும் என் இதயபூர்வமான நன்றிகள்.

‘‘உங்களை நினைவு கூரும்போதெல்லாம் என் கடவுளுக்கு நன்றி கூருகிறேன். உங்கள் அனைவருக்காகவும் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு மன்றாடி வருகிறேன்’’ (பிலி 1:3). கடந்த சில ஆண்டுகளாக தக்கலை மறைமாவட்டத்தின் முன்னேற்றத்திற்காக உழைத்த உயர்பேராயர் கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகைக்கும் அன்னாரோடு இணைந்து பணியாற்றிய ஆயரகக் குழு உறுப்பினர்கள், அருள்தந்தையர்கள் துறவறச் சபையினர் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன். கர்த்தினால் மார் ஜார்ஜ் ஆலஞ்சேரி ஆண்டகை இம்மறைமாவட்டத் தொடக்கம் முதல் மிக அர்ப்பணிப்புடனும் உற்சாகத்துடனும் அதனை வழிநடத்தி சிறப்பாக பணியாற்றினார். 1997 பிப்பிரவரி 2 ம் தேதி முதல் சீரோ மலபார்த் திருச்சபையின் உயர்பேராயராக தேர்ந்தெடுக்கப்படும் வரை தக்கலை மறைமாவட்ட ஆயராக செயலாற்றினார். அந்நாட்களில் நமது மறைமாவட்டம் மக்கள் மற்றும் பங்குகளின் எண்ணிக்கையில் வளர்ச்சியடைந்தது. அன்பான அருள்தந்தையர்களே, அருள்சகோதரிகளே, பொதுநிலையினரே கடந்த காலங்களில் மறைமாவட்டத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் அளித்த அளப்பரிய கொடைகளுக்காக நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இப்பொழுதும் நீங்கள் மறைமாவட்ட வளர்ச்சிக்கு உதவி செய்து கொண்டிருக்கிறீர்கள் என்பதையும் நான் நன்கு அறிவேன். தொடர்ந்தும் நீங்கள் மறைமாவட்ட வளர்ச்சிக்காக பாடுபடுவீர்கள் என்று உறுதியாக நம்புகிறேன். மறைமாவட்டத்தின் மேம்பாட்டிற்காக நீங்கள் ஆற்றும் பணிகளுக்கு எனது வாழ்த்துக்கள்.

என் அன்பான இறைமக்களே, என் இதயத்தில் உங்களுக்கென தனியிடம் உண்டு. நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பில் வளர்ந்து இயேசு கிறிஸ்துவைப் பற்றிய முழுமையான புரிதலிலும் அறிவிலும் முதிர்ச்சியடைய வேண்டும் என்பதே எனது செபமாகும். எல்லாம் வல்ல இறைவனிடம் உங்களுக்கு ஆழ்ந்த நம்பிக்கை உண்டு என்பதை பார்ப்பதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். மறைமாவட்டத்தில் நற்செய்தியை பரப்புவதில் நீங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஓர் அணியாக செயல்படுவதில் நீங்கள் காட்டும் ஒற்றுமை

உணர்வு பாராட்டுக்குரியது. எல்லாம் வல்ல இறைவன் உங்களை தன் அழைத்தலுக்கு தகுடையவராக்க நான் இறைவனிடம் தொடர்ந்து வேண்டுகிறேன். உங்கள் நல்லெண்ணம் ஒவ்வொன்றையும் நம்பிக்கையால் தூண்டப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வாராக (2தெசலோ 11:12)

கிறிஸ்து இயேசுவில் அன்பான சகோதர சகோரரிகளே, இம்மறைமாவட்டத்தின் திருத்தொண்டுப் பணிகளில் உங்களுக்கு சிறப்பான மற்றும் பிரிக்க இயலாத பங்கு உண்டு. நீங்கள் இல்லாமல் இம்மறைமாவட்டம் இல்லை. மறைமாவட்டத் திருச்சபை வாழ்வின் முன் அணியில் நீங்கள் இருக்கிறீகள். நீங்கள் வெறும் கோயிலை சார்ந்தவர்கள் அல்ல ஆனால் நீங்கள் தான் கோயில். தொடக்க கால திருச்சபையில் குறிப்பாக சீரோ மலபார்த் திருச்சபையில் முதல் கிறிஸ்தவர்களின் பங்கு எவ்வாறு இருந்தது என்பது உங்களுக்கு தெரியும் என நான் நம்புகிறேன். திருத்தொண்டிற்காக இவ்வாறான ஒரு உறுதி தேவைப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்வையே இடையூறுக்கு உள்ளாக்குகின்ற முறையில் இன்றைய உலகத்தில் ஆன்மீகத்திலும் சமயத்திலும் அறநெறி விழுமியங்களிலும் சீர்கேடுகள் ஏற்பட்டுள்ளதை நம்மால் அனுபவபூர்வமாக புரிந்து கொள்ள முடியும். சமய வேறுபாடுகளுடையவும் நாத்திகக் கொள்கைகளுடையவும் நிரந்தர வளர்ச்சியையும் குறிப்பாக சமய சகிப்புதன்மை இன்மை போன்றவையும் உலகளவில் இன்று பரந்துள்ளன. இது திருச்சபையின் திருத்தொண்டில் நமது பெரிய பொறுப்பை உய்த்துணர்ந்து நமக்குள்ளே ஆழமாக உற்று நோக்குவதற்கு அழைப்பு விடுக்கிறது. நமது நோக்கம் நற்செய்தியை பறைசாற்றுவதும் மக்களை புனிதப்படுத்துவதுமே.

திருச்சபையின் ஒவ்வொரு உறுப்பினரும் இன்றைய உலகில் புளிப்பு மாவு போன்றிருக்க வேண்டும். இச்சிறந்த நோக்கத்திற்காக தூய ஆவியின் செயல்பாடுகளுக்காக நமது இதயத்தை திறக்க வேண்டும் . இத்தூய ஆவியாரே நமது உள்ளத்தை இறைஆவியால் நிறைத்து நமது செயல்களுக்கு தூண்டுதலாக இருப்பவர். நமது நோக்கத்தின் பலன் கிறிஸ்து இயேசுவோடுள்ள ஒன்றிப்பையே சார்ந்திருக்கிறது. அவரே உண்மையான திராட்சை செடியும் கிளைகளாகிய நமக்கு வாழ்வும் கனியும் தருபவர். புனித யோவான் இதனை சிறப்பாக வெளிக்கொணர்கிறார். “நானே திராட்சை செடி நீங்கள் அதன் கொடிகள். ஒருவர் என்னுடனும் நான் அவருடனும் இணைந்திருந்தால் அவர் மிகுந்த கனி தருவார். என்னை விட்டுப் பிரிந்து உங்களால் எதுவும் செய்ய முடியாது.” (யோவா 15:5). இயேசுவே ‘உண்மையான திராட்சை செடி’ அவரோடு கிளைகளாகிய நாம் ஒட்டி வைக்கப்பட்டுள்ளோம். அதனால் நமக்கு வாழ்வும் நிறைவான வாழ்வும் (யோவ 10:10) உண்டாகும். நம்பிக்கை குறையும் போது நாம் அறிவின்மையில் செயல்படுகிறோம். இயேசு கிறிஸ்துவின் நம்பிக்கை, அருள் மற்றும் அன்பினால் நாம் நிறையப்படுவதற்காக அவரோடு நிரந்தரமான தொடர்பு வைக்க வேண்டும். இயேசுவோடான நமது ஆன்மீக உறவிற்கு நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும். இயேசுவோடுள்ள நெருங்கிய உறவில் வளர திருச்சபை நமக்கு ஏராளமான வாய்ப்புக்களை தருகிறது. இறைவார்த்தை, திருப்பலி மற்றும் பிற அருள் அடையாளங்கள் நமது விசுவாசத்தை ஆழப்படுத்தவும் ஒற்றுமையின் ஒப்பந்தத்தைக் கட்டி எழுப்பவும் உதவ வேண்டும். தினமும் இறைவார்த்தையை வாசித்தல் மற்றும் தியானித்தல் வழியாகவும் திருப்பலியில் முழு ஈடுபாட்டுடன் பங்கேற்பதன் வாயிலாகவும் இயேசுவை தனியாகவும் சமூகமாகவும் கண்டுகொள்வோம். காரணம், ‘‘அவரை சார்ந்து தான் நாம் வாழ்கிறோம், இயங்குகிறோம், இருக்கின்றோம்’’ (தி.ப 17:28) நற்செய்தி நமக்கு அறிவிக்கப்பட்டபோது நமக்கு வழங்கப்பட்ட ஒரு ஆன்மீகக் கொடை நமக்குள் உண்டு. தந்தையிடமிருந்து கிடைத்த விலைமதிப்பற்ற செல்வம் போல மிகக் கவனமாக அதைப் பாதுகாக்க வேண்டும். நாம் பெற்றுக் கொண்ட விசுவாசத்தில் உறுதிய நிற்க விடாமுயற்ச்சி எடுப்போம். அதனால் நமது ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியும் இயேசுவோடு நெருங்கி வரவும் இயலும். செபத்தில் நமது இதயத்தையும் மனதையும் பயபக்தியுடன் உயர்த்துவோம். நம்முடைய தனிப்பட்ட செபங்கள், குடும்ப செபங்கள் மற்றும் செபமாலை சொல்லுதல் போன்றவற்றை ஆர்வத்துடன் தொடர்வோம்.

திருச்சபையின் வளர்ச்சியில் தக்கலை மறைமாவட்ட மக்களாகிய நமக்கு மிகப் பெரிய பங்கு உண்டு. பிற திருச்சபை மற்றும் பிரிவினைச்சபை உறுப்பினர்களுடனுள்ள சகோதரத்துவ உறவிலும் வளர்வோம். அவர்களின் தேவைகளில் பரஸ்பர உதவியை, நமது முழுமையான ஆனால் விவேகத்துடனான ஒத்துழைப்பையும் அளிப்போம். நம்மை பிரிக்கும் தடைகளை விட நம்மை இணைக்கும் உறவுகள் வலிமையானவை. இறைவன் நமக்கு எல்லா விதமான ஆறுதலையும் தருவார். கடவுள் எங்களது இன்னல்கள் அனைத்திலும் எங்களுக்க ஆறுதல் அளிக்கிறார். நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில் உழலும் மற்ற மக்களுக்கும் எங்களால் ஆறுதல் அளிக்க முடிகிறது.(2கொரி1:4-5) அதே வேளையில் கிறிஸ்தவ ஒன்றிபின் உணர்விலிருந்து நம்மை அகலச் செய்யும், அதுபோன்று, திருச்சபையின் மேன்மையை இழிவுபடுத்தும் படைகளிடமும் நாம் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும். நாம் இயேசுவில் அடைக்கலம் கொள்வோம். அவர் நம்மை உறுதிபடுத்தி, தீயோனிடமிருந்து காத்தருள்வார் (2 தெச 3:4)

அன்பான இறைமக்களே, கடந்த காலங்களில் அருள்தந்தையர்கள் மற்றும் பொதுநிலையின தலைவர்களின் பணிகள் வழியாக நமக்கு வழங்கப்பட்டுள்ள மரபுகளின் அடிப்படையில் விசுவாசத்தில் உறுதியாக நிற்போம். வார்த்தையாலும் செயலாலும் ஒருவரையொருவர் உற்சாகப்படுத்தி வலிமையுறச் செய்வோம். நாம் நல்லதையே நினைத்து நல்லதையே பேசி நன்மையே செய்வோம். நம்மையே நாம் இறைவனாகிய இயேசு கிறிஸ்துவோடு இணைத்துக் கொண்டு நெருங்கிய உறவில் அவருடைய நற்செய்திப் பணியிலும் மக்களை புனிதப்படுத்தம் பணியிலும் இணைவோம். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்.(பிலி 2:5) இறைவனின் ஆற்றலின் வலிமையோடு விசுவாசத்தில் நிலைத்து நிற்போம்.இறைமகக்களுக்காக வேண்டுதலில் சோர்வடையாதீர்கள் (எபே6:10,19) காலத்தின் அறிகுறிகளை அறிந்து அதற்கேற்ப மனமகிழ்சியுடன் பதிலளிப்போம். நமது மறைமாவட்டம் முழுவதையும் தூய அன்னை மரியா மற்றும் திருத்தூதர் மார் தோமையார் இவர்களின் திருப்பாதங்களில் ஒப்படைப்போம். அமைதி தரும் கடவள்தாமே உங்களை முற்றிலும் தூய்மையாக்குவராக (1தெச5:23) எல்லா காலங்களிலும் எல்லா வழிகளிலும் இறைவன் உங்களுக்கு அமைதி அளிப்பாராக.நம் ஆண்டவராகிய ஈசோ மெசியாவின் அருள் உங்கள் அனைவரோடும் என்றும் இருப்பதாக.

அன்பான சகோதர சகோதரிகளே, இந்நாட்களில் நான் பங்குகளை பார்வையிட்டு திருப்பலியும் ஒப்புக்கொடுத்து பங்கு மக்களையும் சந்தித்து வருகிறேன். நீங்கள் எனக்கு அளிக்கின்ற ஒத்துழைப்பு, வேண்டுதல், அளவற்ற அன்பு, தூண்டுதல் போன்றவற்றிற்கு நான் என்றும் நன்றியுணர்வோடு கடமைப்பட்டுள்ளேன். நாம் அனைவரும் வேண்டலில் ஒன்றித்திருப்போம்.

தக்கலை மறைமாவட்டத்தை ஆன்மீகப் பாதையில் வளர்த்தி விசுவாத்தில் பிறக்க வைத்து நம்மையெல்லாம் ஆளாக்கிய பெருமை சங்ஙனாச்சேரி உயர் மறைமாட்டத்தின் குறிப்பாக மார் ஜோசப் பவ்வத்தில் அவர்களையேச் சாரும். அன்னாரின் குருத்துவ பொன்விழா, 40 வருட கால ஆயர் பணியின் நிறைவும், திருத்தொண்டு ஆண்டின் நிறைவு விழா மற்றும் மறைமறைமாவட்ட நாள் ஆகிய முப்பெருவிழாக்கள் 14.10.2010 ஞாயிறு அன்று மதியம் 2 மணி முதல் மாலை 5 மணி வரை தக்லை சங்கமத்தில் வைத்து மிகச் சிறப்பாக நடைபெற உள்ளது. பெரிய பங்குகளிலிருந்து 25 உறுப்பினர்களும் சிறிய பங்குகளிலிருந்து 10 உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பிக்க கேட்டுக் கொள்கிறேன். இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

தக்கலை **மார். ஜார்ஜ் இராஜேந்திரன்**

26.09.2012 (தக்கலை மறைமாவட்டம்)

---

குறிப்பு: இச்சுற்றுமடலை செப்டம்பர் 30 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வாசிக்கவும்.